கைக்குக் கொடுக்கப்பட்டது. அது 5 ஆண்டுகளுக்கு குத்த கைக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், அதே நேரத்தில் நிரந்தரமான கட்டிடங்கள் எதுவும் எழுப்பக்கூடாது என்ற நிபந்தனையும் ஏற்கனவே இருக்கிறது. நிரந்தரமான கட்டிடம் இருக்குமானால் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைக்குச் சொந்தமான புறம்போக்கு இடங்களை ஏழைகள் ஆக்கிரமிக்கும்போது பளிச்சென்று வெளியே தெரிகிறது. பணக்காரர்கள் ஆக்கிரமிக்கும்போது வெளியே தெரிவது இல்லை. எனவே பணக்காரர்கள் ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுக்க, அரசாங்கம் கண்காணிப்புக் குழு அமைக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பணக்காரர்களாக இருந்தாலும், ஏழைகளாக இருந்தாலும் குறிப்பாக நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் ஆக்கிரமிப்புகள் இருந்தால் அவைகள் அகற்றப்பட்டு வருகின்றன. அதற்குக் காரணம், ஒவ்வொரு சாலையையும் அகலப்படுத்தவேண்டிய சூழ்நிலை தற்போது இருக்கிறது. சாலைகளை அகலப்படுத்த வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், சில இடங்களில் சாலைகள் கோணலாக இருந்தால் அவற்றை நேர்படுத்துவதற்கும் ஆங்காங்கு இருக்கும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகின்றன. ஆக்கிரமிப்பு யார் செய்தாலும் அது அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துறையூர் நகரில் புறச்சாலை.

* வினா எண். 235—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) துறையூர் நகரில் புறச்சாலை (Bye-p..ss Road) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) & (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. வெ. அரங்கராசன் : தலைவர் அவர்களே, துறையூர் நகரில் புறச்சாலை அமைக்கும் திட்டத்திற்காக ஓராண்டுக் காலத்திற்கு முன்பே நிலங்கள் சர்வே செய்யப்பட்டது. ஆனால், இப்போது அமைச்சர் அவர்கள் அதுபற்றிய பரிசீலனை இல்லை என்று சொல்கிறார்கள். முசிறி-குளித்தலை பாலம் கட்டப்பட்ட பின்னர், இப்போது தினசரி கிட்டத்தட்ட 1,000 லாரிகள் துறையூர் நகரம் வழியாக வருவதால், அதிக விபத்துகள் அந்தச் சாலையில் ஏற்படுகின்றது. ஆகவே, இந்தப் புறச்சாலை அமைக்கும் செயற்குறிப்பை அரசு மறுபரிசீலனை செய்து, விரைவாக நிறைவேற்றித் தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாற்று வழிப் பாதை ஒன்று 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ. 6.26 இலட்ச மதிப்பீட்டில் அமைத்துத் தருவதற்காக ஒரு திட்டம் ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் இதுவரையில் அது அரசின் ஒப்புதல் பெற்ற எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இப்பணி வரும் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்ப மாநிலச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. வெ. அரங்கராசன் : தலைவர் அவர்களே, நிதி வசதி பொறுத்து எடுத்துக்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எப்படி இருந்தாலும் அந்தத் திட்டத்தை 1981–82 ஆம் ஆண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நிதிநிலை சரியாகயிருந்தால் எடுத்துக்கொள்ளப்படும்.

போழியம்மனூர் குடிநீர் வழங்கு திட்டம்.

*வினா எண் 236—திரு. அ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் ஆத்தூர் தொகுதி போழியம்மனூர் என்னும் கிராமத்தில் கூட்டுக் குடிநீர் திட்ட வேலை பாதி அளவில் நிற்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்பொழுது மீண்டும் துவங்கப்படும் ?